



ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387

உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்

ANANDA BHASKAR

www.anandabhaskar.com






சென்னை மலர்: 01 இதழ்: 162 07.12.2025 ஞாயிற்றுக்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 162 | Sunday | pages 4 | Rs.5/-


## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(7-12-2025)
விசுவாவசு ஆண்டு, கார்த்திகை-21

பிறை: தேய்பிறை

திதி
திருதியை இரவு 11.23 வரை பிறகு சதுர்த்தி.

நட்சத்திரம்:
திருவாதிரை காலை 10.41 வரை பிறகு புனர்பூசம்.

யோகம்
சித்தயோகம்

ராகுகாலம்
மாலை 4.30-6.00 மணி.

எமகண்டம்
நண்பகல் 12.00-1.30 மணி.

சூலம் – மேற்கு.

நல்ல நேரம் :
காலை 7-8 மணி. மாலை 3-4 மணி

| | |
|---|---|
| மேஷம் | அமைதி |
| ரிஷபம் | இன்பம் |
| மிதுனம் | வெற்றி |
| கடகம் | பயணம் |
| சிம்மம் | உண்மை |
| கன்னி | திடம் |
| துலாம் | உறுதி |
| விருச்சிகம் | வெற்றி |
| தனுசு | லாபம் |
| மகரம் | நன்மை |
| கும்பம் | நிறைவு |
| மீனம் | தெளிவு |

# “இண்டிகோ நிறுவனத்திடம்தான் தவறு; நடவடிக்கை உறுதி”

## விமானப் போக்குவரத்து அமைச்சர்



புதுடில்லி,டிச,7:

“விமானிகளின் பணி நேர வரம்பு (FDTL) விதிமுறைகள் நவம்பரில் அமலுக்கு வந்த நிலையில், மற்ற அனைத்து விமான நிறுவனங்களும் எந்தப் பிரச்சினையையும் சந்திக்கவில்லை. அப்படியானால், தவறு இண்டிகோவிடம்தான் உள்ளது” என சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம் மோகன் நாயுடு கூறினார்.

இண்டிகோ ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் விமான சேவை நாடு முழுவதும் முடங்கியுள்ளது. இதனால் நாடு முழுவதும் 1000-க்கும் மேற்பட்ட இண்டிகோ விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன. எனவே கடந்த சில நாட்களாக பயணிகள் கடும் பாதிப்பை சந்தித்து வருகின்றனர்.

இதுகுறித்து தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம் மோகன் நாயுடு, “இந்த பிரச்சினை தீர்க்கப்படும் தருவாயில் உள்ளது என்று நான் சொல்ல முடியும். டெல்லி, மும்பை, சென்னை போன்ற மெட்ரோ விமான நிலையங்களில் பெரும் நெரிசல் ஏற்பட்டுள்ளது. ஆனாலும், கடந்த இரண்டு நாட்களாக இருந்த நிலைமை சீராகி வருகிறது. மற்ற விமான நிலையங்களிலும் இன்றிரவுக்குள் பிரச்சினை முடிக்கப்படும். மேலும் இண்டிகோ நாளை முதல் குறைந்த எண்ணிக்கையில் மீண்டும் செயல்பாடுகளைத் தொடங்க உள்ளது.

நிலைமை சீராகும்போது, சேவைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப் படும். ஆனால் பயணிகள் எந்தப் பிரச்சினையையும் எதிர்கொள்ளாதவகையில், நாளை முதல் செயல்பாடுகள் இருக்கும். இண்டிகோ செயல்பாடுகள் முழுமையாக இயல்பு நிலைக்குத் திரும்ப இன்னும் இரண்டு நாட்கள் ஆகும்.

விமானிகள் மற்றும் கேபின் பணியாளர்கள் போதுமான ஓய்வு பெறுவதை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட புதிய FDTL விதிமுறைகள் நவம்பர் 1 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது. அமைச்சகமும், ஒழுங்குமுறை ஆணையமும் விமான நிறுவனங்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறது. நிலைமையை நாங்கள் முழுமையாக கண்காணித்து வருகிறோம், விமான நிறுவனங்களுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகிறோம். இந்த விதிமுறைகளில் உள்ள சிக்கல்களை எங்களிடம் கூற பல அமைப்புகளை நாங்கள் அவர்களுக்கு வழங்கியுள்ளோம். அதனால்தான், இண்டிகோ நிறுவனத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் குறித்து விசாரிக்கவும், தவறு செய்தவர்களைக் கண்டறியவும், அவர்களுக்கு எதிராக நடவடிக்கையும் எடுக்கப் போகிறோம். தற்போதைய சிக்கல்களுக்கு FDTL வழிகாட்டுதல்கள் முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது, ஆனால் மற்ற விமான நிறுவனங்களும் இதே விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருந்தது. ஆனால், அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

நாம் இப்போது பேசும் பிரச்சினை இண்டிகோ ஏர்லைன்ஸ் தொடர்பானது. எனவே தவறு இண்டிகோ நிறுவனத்திடம்தான் உள்ளது. மற்றபடி தவறு முக்கிய மட்டத்திலோ, அமைச்சக மட்டத்திலோ அல்லது வேறு ஏதேனும் மட்டத்திலோ அல்ல. FDTL அல்லது அமைச்சகத்திடமிருந்து ஏதாவது பிரச்சினை இருந்தால், அனைத்து விமான நிறுவனங்களும் பிரச்சினைகளைச் சந்தித்திருக்க வேண்டும், ஆனால் இங்கே அப்படி நடக்கவில்லை.

இந்த விவகாரத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாது. ஆனால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால் இது நாங்கள் யாரையும் மகிழ்விக்க விரும்பும் ஒன்றல்ல. அமைச்சகத்தின் கவனம் பயணிகள்தான் என்பதில் நாங்கள் மிகவும் தெளிவாக இருக்கிறோம். அடுத்த முறை இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்வது எங்கள் வேலை, எங்கள் பொறுப்பு. எனவே, விசாரணையைத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதில் நாங்கள் மிகவும் தெளிவாக இருக்கிறோம்” என்றார்.

## வங்கி மோசடி வழக்கில் அனில் அம்பானி குழுமத்தின் ரூ.1,120 கோடி சொத்து முடக்கம்

புதுடெல்லி,டிச.7:

கடந்த 2017-ம் ஆண்டு முதல் 2019-ம் ஆண்டு வரை அனில் அம்பானிக்கு சொந்தமான நிறுவனங்களில் யெஸ் வங்கி ரூ.2,965 கோடி முதலீடு செய்தது. பின்னர் இந்த முதலீடு வாராக் கடன்களாக மாறின.

இதுகுறித்து நடத்தப்பட்ட விசாரணையில் ரூ.11,000 கோடி பொது நிதி, யெஸ் வங்கி மூலமாக அனில் அம்பானி குழுமத்தின் நிதி நிறுவனங்களுக்கு வந்துள்ளது தெரிய வந்தது. இதையடுத்து அனில் அம்பானியின் 18 சொத்துக்களை அமலாக்கத் துறை தற்போது முடக்கியது. இவற்றின் மதிப்பு ரூ.1,120 கோடி ஆகும். கடந்த 2010 முதல் 2012-ம் ஆண்டு வரை ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் ரூ.40,185 கோடி கடன் பெற்று அதை தவறாக பயன்படுத்தியது.

இந்த முறைகேடுகளையும் அமலாக்கத்துறை விசாரித்து அனில் அம்பானியின் ரிலையன்ஸ் குழுமத்துக்கு சொந்தமான ரூ.8,997 கோடி மதிப்பிலான சொத்துக்களை ஏற்கெனவே முடக்கியுள்ளது. தற்போது முடக்கப்பட்ட ரூ.1,120 கோடி சொத்துக்களையும் சேர்த்து மொத்தம் ரூ.10,117 கோடி மதிப்பிலான சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது.

# இலங்கை மக்களுக்கு 950 டன் நிவாரண பொருட்கள்: மு.க.ஸ்டாலின் அனுப்பி வைத்தார்



சென்னை,டிச,7:

இலங்கை மக்களுக்கு நிவாரண பொருட்களை சுமந்து செல்லும் கப்பலை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

வங்கக்கடலில் உருவான ‘டிட்வா’ புயல் இலங்கையை புரட்டி போட்டது. வரலாறு காணாத வகையில் பெய்த பெருமழையால் அந்நாட்டில் உள்ள பதுளை கண்டு, நுவரெல்லா, மாத்தளை உள்ளிட்ட மாவட்டங்கள் கடும் பாதிப்பை சந்தித்துள்ளன. புயலின் கோரத்தாண்டவத்தில் 500-க்கும் மேற்பட்டோர் பலியாகினர். மழை வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 700-க்கும் மேற்பட்ட மக்கள் மாயமாகி உள்ளனர்.


‘டிட்வா’ புயல் ஏற்படுத்திய பேரழிவால் 14 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் சிக்கி தவித்த 300-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் விமான படை மூலம் பத்திரமாக மீட்கப்பட்டு தாயகம் அழைத்து வரப்பட்டனர். இந்த புயல் பாதிப்பால் இலங்கையில் வசிக்கும் நம் தொப்புள் கொடி உறவான ஈழத்தமிழர்களும் சொல்லொணா துயரத்துக்கு ஆளாகி உள்ளனர்.

புயலால் உயிரிழந்தவர்களுக்கு தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது அனுதாபத்தையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்திருந்தார். அப்போது அவர், இலங்கை மக்கள் இந்த துயரில் இருந்து மீண்டு வரும் வகையில், தமிழக அரசு துணைநிற்கும் என்றும், துயருறும் அந்த மக்களுக்கு உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்களை வழங்கிட அதிகாரிகள் குழுவை அமைக்கிறோம் என்றும், அவர்கள் மீண்டெழுந்திடத் துணை நிற்போம் என்றும் கூறியிருந்தார். அந்தவகையில் இலங்கை மக்களுக்கு தமிழக அரசு சார்பில் சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் இருந்து கப்பல் மூலம் நிவாரண பொருட்கள் இன்று (சனிக்கிழமை) அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், சென்னை துறைமுகத்தில் இருந்து இன்று நிவாரண பொருட்களை சுமந்து செல்லும் கப்பலை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

சென்னையில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட நிவாரண பொருட்களில் 10 ஆயிரம் போர்வை, 10 ஆயிரம் துண்டு, 5 ஆயிரம் வேஷ்டி, 5 ஆயிரம் சேலை, 1,000 தார்பாலீன் ஆகியவையும், 650 டன் பருப்பு, சர்க்கரை, பால் பவுடர் ஆகியவையும் இடம் பெற்றுள்ளது. தூத்துக்குடியில் இருந்து 300 டன் பருப்பு மற்றும் சர்க்கரை ஆகியவை அனுப்பப்படுகிறது. புயலால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு தமிழக அரசு சார்பில் மொத்தம் 950 டன் நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## தங்கம் விலை பவுனுக்கு ரூ.320 உயர்வு: வெள்ளி கிலோவுக்கு ரூ.3,000 அதிகரிப்பு



சென்னை,டிச,7:

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுறது. அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு 50 சதவீதம் வரி விதிப்பு, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவு உள்ளிட்ட காரணங்களால், தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது.

அந்த வகையில் தங்கம் விலை இன்று உயர்ந்துள்ளது. சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராம் ஒன்றுக்கு ரூ.40 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.12,040-க்கும், பவுன் ஒன்றுக்கு ரூ.320 என உயர்ந்து ஒரு பவுன் தங்கம் ரூ.96,320-க்கும் விற்பனை ஆகிறது.24 காரட் சுத்த தங்கம் பவுன் ஒன்றுக்கு ரூ.1,05,080 என விற்பனை ஆகிறது. 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.80,320-க்கும் விற்பனை ஆகிறது.

வெள்ளி விலை இன்று கிராம் ஒன்றுக்கு ரூ.3 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.199-க்கு விற்பனை ஆகிறது. கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.3,000 உயர்ந்து, ஒரு கிலோ ரூ.1,99,000-க்கு விற்பனை ஆகிறது.






## “அம்பேத்கர் வாழ்வு ஒரு பாடம்..



“அம்பேத்கரின் வாழ்வே ஒரு பாடம். அவரது போராட்டங்களே சமத்துவச் சமூகத்தை நோக்கிய பயணத்தில் நமக்கு ஊக்கம். அண்ணல் அம்பேத்கர் எனும் பேரொளியின் வெளிச்சத்தில் தொடர்ந்து முன்னேறுவோம்” என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அம்பேத்கரின் 70-வது நினைவு தினம் இன்று (டிச.6) அனுசரிக்கப்படுகிறது. இதனை ஒட்டி அவரது உருவப்படத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலரஞ்சலி செலுத்தினார்.





## அம்பாள் மரசிம்மாசனத்தில் திருக்கோயில் வலம்




மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் 05.12.2025 திருக்கார்த்திகை தீபத்திருவிழா-2025-மாலை-சுவாமி, அம்பாள் மரசிம்மாசனத்தில் திருக்கோயில் வலம். அம்பொன் ஆலவாய் நம்பனார் கழல் நம்பி வாழ்பவர் துன்பம் வீடுமே-01.94.7-எம்பிரான் திருஞானசம்பந்தர் பெருமான்.

**சொக்கே நின் தாளே துணை**

# வெங்கடேசப் பெருமாள் ஆலய கார்த்திகை தீபம்




சென்னை மந்தைவெளி மாரி செட்டித் தெரு வெங்கடேசப் பெருமாள் ஆலய கார்த்திகை தீபம்.

# கொட்டகுளம், அருணகிரி மங்கலம் டாக்டர்.அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்தல்






**திருவண்ணாமலை, டிச.07:** திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் ஒன்றியம் புதுப்பாளையம் ஒன்றியம் கொட்டகுளம் ஊராட்சி, கலசப்பாக்கம் ஒன்றியம் அருணகிரி மங்கலம் ஊராட்சியில் ஆகிய 2 ஊர்களிலும் டாக்டர் அம்பேத்கர் 69-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு போளூர் சட்டமன்ற உறுப்பினர் அக்ரி.எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் டாக்டர் அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பள்ளி மாணவர்களுக்கு நோட்டு,புத்தகம் , எழுதுகோல் வழங்கினார். உடன் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் டாக்டர் அம்பேத்கர் 69 - ஆம் ஆண்டு நினைவு தினத்தில் அனைவரும் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.



**சென்னை, டிச.07:** Dr. அம்பேத்கார் 69 ஆம் ஆண்டு நினைவு நாள் முன்னிட்டு லீடர் வி கே அறிவழகன் தேசிய செயலாளர் ,அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டி .

பொறுப்பாளர் கேரளா மாநிலம் .

மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது உடன் கொடுங்கை R.செல்வம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநில செயல் தலைவர் OBC பிரிவு பெரம்பூர் சட்டமன்ற பொறுப்பாளர் மோகன் சவுத்ரி மாநிலத் துணைத் தலைவர் அமைப்பு சாரா காங்கிரஸ் KKC மற்றும் கட்சித் தொண்டர்கள்.

# மதுரையில் இன்று தொழில் முதலீட்டாளர் மாநாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்



**மதுரை, டிச.07:** மதுரையில் இன்று நடைபெறும் தொழில் முதலீட்டு மாநாடு, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொள்கிறார். இதற்காக இன்று இரவு சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை வருகிறார். அவருக்கு விமான நிலையத்தில் அமைச்சர்கள் மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், கலெக்டர் பிரவீன்குமார் மற்றும் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் வரவேற்கின்றனர்.

தொடர்ந்து நேற்று இரவு அவுட்போஸ்ட் பகுதியில் உள்ள தனியார் விருந்தினர் மாளிகையில் மு.க.ஸ்டாலின் தங்கினார். இன்று (ஞாயிற்றுக்கிழமை) மக்கள் விடுதலை கட்சி நிறுவனர் முருகவேல்ராஜன் இல்ல திருமண விழா கருப்பாயூரணியில் உள்ள தனியார் மகாலில் நடக்கிறது. இதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

பின்னர் மதுரை மேலமடை சந்திப்பில் ரூ.150.28 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட மேம்பாலத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

பின்னர் காலை 10 மணியளவில் விரகனூர் ரிங்ரோட்டில் உள்ள வேலம்மாள் ஐடா ஸ்கெட்டா அரங்கில் தொழில் முதலீட்டாளர் மாநாடு நடைபெறுகிறது. இதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார். அப்போது பல்வேறு நிறுவனவங்களுடன் தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகிறது.

இதனை தொடர்ந்து மதுரை உத்தங்குடியில் அரசு சார்பில் நடைபெறும் பிரமாண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொள்கிறார்.

இதில் மாற்றுத்திறனாளிகள், சுய உதவிக்குழுவினர் உள்ளிட்ட 1 லட்சத்து 67 ஆயிரம் பேருக்கு மு.க.ஸ்டாலின் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் இந்த விழாவில் முல்லை பெரியாறு லோயர் கேம்ப் பகுதியில் இருந்து மதுரை மாநகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் திட்டப்பணிகளை தொடங்கி வைக்கிறார். விழா முடிவடைந்த பின் பிற்பகலில் விமானம் மூலம் மு.க.ஸ்டாலின் சென்னை செல்கிறார்.

முதலமைச்சர் வருகையை முன்னிட்டு மதுரை விமான நிலையம், அவர் தங்கும் இடம், விழா நடைபெறும் பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பாதுகாப்பு கருதி டிரோன் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் 16 வது மாநில மாநாடு




தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் 16 வது மாநில மாநாடு தஞ்சாவூர் தமிழரசி மண்டபத்தில் டிசம்பர் 4,5,6,7 ஆகிய நான்கு நாட்களாக நடைபெற்று வருகிறது. நீதியரசர் சந்துரு, இந்து இராம், திரைக்கலைஞர் ரோகிணி, திமுக நாடாளுமன்றக்குழு தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி உள்ளிட்ட ஆளுமைகளும் எழுத்தாளர்கள் கலைஞர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கி வருகின்றனர்.இரண்டாவது நாளாக நடைபெற்று வரும் மாநாட்டு அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு மதுரை மாநகர் மாவட்டம் சார்பில் தமுஎகச மதுரை மாநகர் மாவட்ட துணைத் தலைவர் முனைவர் சு.கிருஷ்ணன் கருத்துக்களை பதிவு செய்தார்.

# அம்பேத்கர் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை



**உளுந்தூர்பேட்டை , டிச.7:** இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் தந்தை புரட்சியாளர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் உளுந்தூர் பேட்டை சட்டமன்ற தொகுதி திமுக சார்பில் உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையம் பகுதியில் அவரது திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட துணை செயலாளரும் நகர மன்ற தலைவருமான கே.திருநாசுக்கரசு ஒன்றிய செயலாளர்கள் U.S.வைத்திய நாதன், ராஜவேல், ஜி.ஆர்.வசந்தவேல், கே.வி.முருகன் நகர செயலாளர் த.டேனியல்ராஜ், பொதுக்குழு உறுப்பினர் மு.செல்லையா மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அருண்ராஜ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் துரைமுருகன், மாவட்ட கவுன்சிலர் சுந்தரமூர்த்தி, நகர இளைஞரணி அமைப்பாளர் மனோபாலன் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் முருகவேல் துணை அமைப்பாளர் ராஜேஷ் மாவட்ட சார்பு அணியினர் ஜெகதீசன், தேவசேனாதிபதி, தங்க. விஸ்வநாதன், குருராஜ், நீதிபதி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணியினர் திரளாக கலந்துகொண்டனர்.

# பனியன் ஆடைகள் விலையை 5 சதவீதம் உயர்த்த திட்டம்



**திருப்பூர், டிச.07:** திருப்பூரில் தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர்கள் சங்க (சைமா) கலந்துரையாடல் கூட்டம் சங்க அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்தில் சிறுகுறு தொழில்களில் ஜாப் ஒர்க்கிற்கான பணத்தை 45 நாட்களுக்குள் வழங்க மத்திய அரசு சட்டம் கொண்டு வந்துள்ளது.

அதேபோல் ரீடெய்லர்களும் பணத்தை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மத்திய அரசிடம் வலியுறுத்த முடிவு செய்யப்பட்டது.

மேலும் தற்போது உற்பத்தி செலவு, பணியாளர்கள் சம்பளம் என செலவு அதிகரித்து உள்ளது. மேலும் பனியன் ஆடைகளின் விலையை உயர்த்தி 2 ஆண்டுகளுக்கு மேல் ஆவதால் 3 சதவீதம் முதல் 5 சதவீதம் வரை விலையை உயர்த்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

பனியன் ஆடைகளை வாங்கும் வியாபாரிகள் சிலர் அதற்கான தொகையை சரிவர கொடுப்பதில்லை. அவர்களை பிளாக் லிஸ்ட்டில் (கருப்பு பட்டியல்) கொண்டு வருவது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது.

# அண்ணல் அம்பேத்கர் 69வது நினைவு நாள்



**பொள்ளாச்சி, டிச.07:** அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 69 நினைவு நாளை முன்னிட்டு பொள்ளாச்சி புதிய பேருந்து நிலையம் முன்பு அண்ணல் அம்பேத்காரின் புகைப்படத்துக்கு மக்கள் விடுதலைமுன்னணி இயக்கத்தின் மாநில அமைப்பாளர் கா. மாரிமுத்து அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதில் திமுக நகர மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன் தி கா பொதுக்குழு உறுப்பினர் பரமசிவம் அவர்கள் பொள்ளாச்சி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆ. மகேந்திரன் அனைத்து நிர்வாகிகளும் திரளாக கலந்து கொண்டனர்.

# அரசு மருத்துவமனை தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடம், அரசு மருத்துவமனை செயல்பாடுகள் குறித்து ஆய்வு





**திருவண்ணாமலை, டிச.07:** திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதியதாக கட்டப்பட்ட வரும் தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடத்தை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ் துறை அமைச்சர் திரு மா.சுப்பிரமணியன் அவர்கள் தீவீர சிகிச்சை பிரிவு கட்டிடத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கூட்ட அரங்கில் மருத்துவமனையின் செயல்பாடுகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டமும் நடைபெற்றது.

கூட்டத்தில் அரசு மருத்துவமனை மருத்துவர்கள், அரசு அதிகாரிகள் அனைவரும் ஆய்வு கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு மாலை அணிவித்து மரியாதை



**பொள்ளாச்சி, டிச.07:** பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள் 69 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதில் முன்னாள் நகர மன்ற தலைவர் அனைத்திந்திய அண்ணா திமுக நகரக் கழக செயலாளர் வி கிருஷ்ணகுமார் அவர்கள் மேற்கு ஒன்றிய செயலாளர் சக்திவேல் கிணத்துக்கிடவு கிழக்கு ஒன்றிய செயலாளர் பாபு T அருணாசலம் N வீராசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மதுரை மேம்பாலத்திற்கு வேலுநாச்சியார் பெயர்

**முதலமைச்சர் அறிவிப்பு**



**சென்னை, டிச.07:** மதுரை மேலமடை சந்திப்பு சாலையில் உள்ள மேம்பாலத்திற்கு வீரமங்கை வேலுநாச்சியார் பெயர் சூட்டப்பட்டது.

இன்று திறக்கப்பட உள்ள நிலையில் மேம்பாலத்திற்கு வீரமங்கை வேலுநாச்சியார் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மதுரை மேலமடை சந்திப்பு சாலையில் உள்ள மேம்பாலத்திற்கு வீரமங்கை வேலுநாச்சியார் பெயர் சூட்டப்பட்டது.

மதுரை திருநகர் மேலமடை சந்திப்பில் ரூ.150 கோடி செலவில் கட்டப்பட்ட மேம்பாலத்திற்கு வேலுநாச்சியார் பெயரை சூட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இன்று திறக்கப்பட உள்ள நிலையில் மேம்பாலத்திற்கு வீரமங்கை வேலுநாச்சியார் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அண்மையில் கோவையில் திறக்கப்பட்ட மேம்பாலத்திற்கு ஜி.டி. நாயுடு பெயர் வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### இண்டிகோ விமான சேவை ரத்து

# தொலைதூர ரெயில்களில் கூடுதல் பெட்டிகள் இணைப்பு



**சென்னை, டிச.7:** நாடு முழுவதும் இண்டிகோ விமான சேவை ரத்து செய்யப்பட்டுள்ளதால், பயணிகள் கடும் அவதி அடைந்துள்ளனர். இந்த நிலையில், பாதிக்கப்பட்டுள்ள பயணிகள் வசதிக்காக தொலைதூர ரெயில்களில் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக, தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

திருச்சியில் இருந்து ஜோத்பூர் செல்லும் ஹம்சபார் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (வண்டி எண் 20482) இன்று முதல் கூடுதலாக ஒரு ஏ.சி. 3-ம் வகுப்பு பெட்டி இணைக்கப்படுகிறது.

இதேபோல், ஜோத்பூரில் இருந்து திருச்சிக்கு வரும் ஹம்சபார் எக்ஸ்பிரஸ் ரெயிலில் வரும் 10-ந் தேதி முதல் கூடுதலாக ஒரு 3-ம் வகுப்பு பெட்டி இணைக்கப்படுகிறது.

எம்.ஜி.ஆர். சென்னை சென்டிரலில் இருந்து திருவனந்தபுரம் செல்லும் சூப்பர்பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (12695) 6-ந் தேதி முதலும், இதேபோல் திருவனந்தபுரத்தில் இருந்து எம்.ஜி.ஆர். சென்னை சென்டிரல் வரும் சூப்பர்பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரெயிலில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) முதலும் கூடுதலாக ஒரு ஏ.சி. 3-ம் வகுப்பு பெட்டி இணைக்கப்படுகிறது.

மேலும், எம்.ஜி.ஆர். சென்னை சென்டிரலில் இருந்து மங்களூரு சென்டிரல் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (12601) இன்று முதல் ஒரு ஏ.சி. 3-ம் வகுப்பு பெட்டி இணைக்கப்படுகிறது.

இதேபோல், சென்னை கடற்கரையில் இருந்து மும்பை சி.எஸ்.டி. செல்லும் சூப்பர்பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரெயிலில் இன்று முதலும், (22158) மும்பை சி.எஸ்.டி.யில் இருந்து சென்னை கடற்கரை வரும் எக்ஸ்பிரஸ் ரெயிலில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) முதலும் கூடுதலாக ஒரு ஏ.சி. 3-ம் வகுப்பு பெட்டி இணைக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆதிபுரீஸ்வரர் கவசம் திறப்பு

### விடிய விடிய காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம்




**சென்னை, டிச.7:** திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோவிலில் உள்ள ஆதிபுரீஸ்வரர் மீதான வெள்ளிக்கவசம் கார்த்திகை மாத பவுர்ணமியையொட்டி நேற்று முன்தினம் மாலை சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு திறக்கப்பட்டது. முதல் நாளான நேற்று முன்தினம் ஆதிபுரீஸ்வரரை கவசம் இன்றி தரிசிக்க ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டதால் நள்ளிரவு 12 மணிவரை கோவில் நடை திறக்கப்பட்டு பக்தர்களை அனுமதித்தனர்.

2-வது நாளான நேற்று அதிகாலை முதலே கோவிலுக்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கை பலமடங்கு அதிகரித்தது. பெரும்பாலான பக்தர்கள் கோவில் முன்பு விடிய, விடிய காத்திருந்து அதிகாலையிலேயே ஆதிபுரீஸ்வரரை தரிசனம் செய்து சென்றனர்.

இன்று கடைசி நாள் பொதுமக்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டு, இரவு 8 மணியளவில் நடைபெறும் அர்த்தஜாம பூஜைக்கு பிறகு ஆதிபுரீஸ்வரர் சிலையில் வெள்ளிக்கவசம் மீண்டும் மூடப்படும். இந்த 3 நாட்களும் ஆதிபுரீஸ்வரருக்கு புனுகு சாம்பிராணி தைல அபிஷேகம், மகா அபிஷேகம் செய்யப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியின் போது வழங்கப்படும் பூஜை செய்யப்பட்ட புனுகு சாம்பிராணி தைலம் பிரசித்தி பெற்றது என்பதால் இந்த தைலம் அடங்கிய சிறிய டப்பாவை ரூ.20 கட்டணத்தில் கோவில் நிர்வாகமே விற்பனை செய்து வருகிறது. சிறப்பு வழியில் சென்று தரிசனம் செய்ய விரும்பும் பக்தர்கள் ரூ.25, ரூ.100 கட்டணங்களை கவுண்ட்டரில் செலுத்தி டோக்கன் பெற்று செல்லலாம். விழா ஏற்பாடுகளை கோவில் உதவி கமிஷனர் நற்சோனை உள்ளிட்ட ஊழியர்கள் செய்துள்ளனர்.

இதனால் திருவொற்றியூர் வரும் மெட்ரோ ரெயில்கள், பஸ்களில் கூட்டம் அலைமோதுகிறது. திருவொற்றியூர் தேரடியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு உள்ளது.



## தினம் ஒரு குறள்

**நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை போற்றி யொழுகப் படும்.** - குறள் 154

నిండుదనము సీలో నుండంగ నెంచిన
వదలకొర్ర్యు భద్ర పరుప వలయు - కురళ్ 154

अगर सर्व-गुण-पूर्णता, तुमको छोड़ न जाय ।
क्षमा-भाव का आचरण, किया लगन से जाय ॥ - कुराल 154

Niraiyutaimai Neengaamai Ventin Poraiyutaimai
Potri Yozhukap Patum - Kural 154

# தூத்துக்குடியில் பைக் மீது பஸ் மோதல்: வடமாநில வாலிபர் உயிரிழப்பு

**தூத்துக்குடி, டிச.7:** தூத்துக்குடி மாப்பிள்ளையூரணி, தெற்கு காமராஜ் நகரில் வசிப்பவர் ராமநாதன் மகன் முனியசாமி (வயது 19), உத்தரபிரதேச மாநிலம் பகப்பூரைச் சேர்ந்த பியூரி அலி மகன் சிரமான் அலி(24) ஆகிய இருவரும் திருச்செந்தூரில் உள்ள ஜன்னல் வடிவமைக்கும் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார்கள். இவர்கள் 2 பேரும் நேற்று காலையில் தூத்துக்குடியில் இருந்து பைக்கில் திருச்செந்தூருக்கு சென்று கொண்டிருந்தனர்.

முத்தையாபுரம் காவல் நிலையம் அருகே சென்று கொண்டிருந்தபோது தூத்துக்குடியில் இருந்து திருச்செந்தூர் நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து பைக் மீது மோதியதில் இருவரும் தூக்கி வீசப்பட்டு பலத்த காயம் அடைந்தனர். உடனடியாக இருவரையும் மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர் அங்கு சிகிச்சை பலன் அளிக்காமல் மாலையில் சிரமான் அலி பரிதாபமாக இறந்தார்.

முனியசாமிக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் குறித்து முத்தையாபுரம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் (பொறுப்பு) ஷோபா ஜென்சி வழக்குப்பதிவு செய்து தனியார் பேருந்தை ஓட்டி வந்த நாசரேத் சின்னமாடன் குடியிருப்பு தெற்கு தெருவை சேர்ந்த கணேசன் மகன் பொன்மாரிமுத்து(33) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### ஓய்வு பெற்ற தூய்மை பணியாளரிடம்

# ரூ. 5 ஆயிரம் லஞ்சம் வாங்கிய நகராட்சி காசாளர் கைது



**ராணிப்பேட்டை, டிச.7:** ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை பகுதியை சேர்ந்தவர் தூய்மை பணியாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றார். இதனிடையே, ஓய்வு பெற்ற தூய்மை பணியாளருக்கான அவர் அரியர் பணத்தை பெற வாலாஜாபேட்டை நகராட்சி அலுவலகத்திற்கு சென்றுள்ளார். அப்போது, அரியர் பணத்தை பெற ரூ. 5 ஆயிரம் லஞ்சம் தருமாறு நகராட்சி காசாளர் கேட்டுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த ஓய்வு பெற்ற தூய்மை பணியாளர் இது குறித்து லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் அளித்துள்ளார்.

புகாரை தொடர்ந்து லஞ்ச ஒழிப்புத்துறை அறிவுத்தல்படி, நேற்று மாலை வாலாஜாபேட்டை நகராட்சிக்கு சென்ற ஓய்வு பெற்ற தூய்மை பணியாளர் லஞ்சம் கொடுப்பது போல் போலி ரூபாய் நோட்டுகளை நகராட்சி காசாளரிடம் கொடுத்துள்ளார். அந்த ரூ. 5 ஆயிரம் பணத்தை நகராட்சி காசாளர் வாங்கியுள்ளார். அப்போது அங்கு பதுங்கி இருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார், லஞ்சம் வாங்கிய நகராட்சி காசாளரை கையும் களவுமாக பிடித்தனர். இதையடுத்து, லஞ்சம் வாங்கிய நகராட்சி காசாளர் கைது செய்யப்பட்டார்.

## த.வெ.க. பரப்புரைச் செயலாளராக நாஞ்சில் சம்பத் நியமனம்

**சென்னை, டிச.07:** தமிழக வெற்றிக் கழகத்தில் நேற்று இணைந்த நாஞ்சில் சம்பத்திற்கு பொறுப்பு வழங்கி விஜய் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, நாஞ்சில் சம்பத்திற்கு தவெகவின் பரப்புரைச் செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

மக்களுக்கான அரசியலில் நம்மோடு பயணிக்க இருக்கும் அவரை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அண்ணன் நாஞ்சில் சம்பத் அவர்கள், கழகத்தின் பரப்புரைச் செயலாளர் (Campaign Secretary) பொறுப்பில் நியமிக்கப்படுகிறார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் 1050 மெகாவாட் மின் உற்பத்தி பாதிப்பு

### மின்வெட்டு ஏற்படும் அபாயம்



**தூத்துக்குடி, டிச.7:** தூத்துக்குடியில் தமிழக அரசுக்கு சொந்தமான அனல்மின் நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு 5 யூனிட்டுகள் மூலம் 1,050 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு மின்சாரம் அனுப்பப்படுகிறது

இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் 15-ந்தேதி அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக முதலாவது மற்றும் 2-வது யூனிட்டுகள் தீ விபத்தில் எரிந்து முற்றிலும் சேதமானது.

இந்த நிலையில் 4-வது மற்றும் 5-வது யூனிட் பராமரிப்பு பணிக்காக கடந்த சில மாதங்களுக்கு முன்பு நிறுத்தப்பட்டு 3-வது யூனிட்டில் மட்டும் 210 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

இந்த நிலையில் 3-வது யூனிட்டிலும் நேற்று இரவு பழுது காரணமாக மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் மொத்தம் உள்ள 5 யூனிட்டுகளிலும் மின் உற்பத்தி முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளதால் 1050 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது மழைக்காலம் என்பதால் குறைவான அளவில் மின்சாரம் நுகர்வு நடைபெற்று வரும் நிலையில் விரைவில் இந்த அனல் மின் நிலையத்தில் மின்சார உற்பத்தியை தொடங்காவிட்டால் மின்வெட்டு ஏற்படும் அபாயம் உருவாகும் என கூறப்படுகிறது.

# பாபர் மசூதி இடிப்பு தினம்: தமிழகம் முழுவதும் போலீசார் தீவிர சோதனை

**சென்னை, டிச.7:** பாபர் மசூதி இடிப்பு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது. சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற கார் குண்டுவெடிப்பு சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்தியதால் இந்த ஆண்டு பாபர் மசூதி இடிப்பு தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் தமிழ்நாட்டில் பாதுகாப்பு உஷார் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பஸ், ரெயில் நிலையங்கள், வழிப்பாட்டு தலங்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கூடுதல் கண்காணிப்பு நடவடிக்கையில் போலீசார் ஈடுபட்டுள்ளனர். சென்னையில் 15 ஆயிரம் போலீசார் உள்பட தமிழகம் முழுவதும் 1 லட்சம் போலீசார் இன்று பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

எழும்பூர், சென்டிரல் ரெயில் நிலையத்தில் பயணிகள் உடமைகள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதே போன்று சென்னை முழுவதும் நேற்றிரவு வாகன சோதனையில் போலீசார் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

தனியார் தங்கும் விடுதிகளிலும் போலீசார் சோதனை நடத்தி, சந்தேகத்துக்குரிய நபர்கள் தங்கி இருக்கிறார்களா? என்பதை ஆய்வு செய்தனர்.

# தமிழகத்தில் 98.23 சதவீத SIR படிவங்கள் இணையத்தில் பதிவேற்றம் - தேர்தல் ஆணையம்

பீகாரை தொடர்ந்து தேர்தலை சந்திக்கும் தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் உள்ளிட்ட 12 மாநிலங்களில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணிகள் (SIR) நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் கடந்த நவம்பர் 4-ந் தேதி முதல் SIR பணிகள் தொடங்கிய நிலையில் வரும் 11-ஆம் தேதியுடன் முடிவடைய உள்ளது.

தமிழகம் முழுவதும் 68 ஆயிரத்து 470 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் இந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் தமிழகத்தில் மொத்தம் உள்ள 6 கோடியே 41 லட்சத்து 14 ஆயிரத்து 587 வாக்காளர்களில் 99.81 சதவீதம் பேருக்கு, அதாவது, 6 கோடியே 39 லட்சத்து 95 ஆயிரத்து 854 படிவங்கள் விநியோகிக்கப்பட்டுவிட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேலும், அவற்றில் 6 கோடியே 29 லட்சத்து 79 ஆயிரத்து 208 படிவங்கள் அதாவது 98.23 சதவீதம் திரும்பபெறப்பட்டு இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணையம் அறிவித்துள்ளது.

அதேபோல் புதுச்சேரியில் மொத்தம் 10 லட்சத்து 21 ஆயிரத்து 578 வாக்காளர்களில் 99.93 சதவீத பேருக்கு அதாவது, 10 லட்சத்து 20 ஆயிரத்து 815 கணக்கீட்டு படிவங்கள் விநியோகிக்கப்பட்டதாவும் அவற்றில் 10 லட்சத்து 11 ஆயிரத்து 921 படிவங்கள், தோராயமாக 99.05 சதவீதம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணையம் தெரிவித்துள்ளது.

### கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கலை முன்னிட்டு

# ஊட்டி சிறப்பு மலை ரெயில் 25-ந்தேதி முதல் இயக்கம்



**மேட்டுப்பாளையம், டிச.7:** கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஊட்டி-மேட்டுப்பாளையம், குன்னூர்-ஊட்டி, ஊட்டி-கேத்தி-ஊட்டி இடையே சிறப்பு மலை ரெயில் வருகிற 25-ந்தேதி முதல் ஜனவரி 26-ந்தேதி வரை இயக்கப்படுகிறது.

இதுதொடர்பாக சேலம் ரெயில்வே கோட்டம் வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:-

கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஊட்டி-மேட்டுப்பாளையம், குன்னூர்-ஊட்டி, ஊட்டி-கேத்தி-ஊட்டி இடையே சிறப்பு மலை ரெயில்கள் இயக்கப்படுகின்றன.

அதன்படி மேட்டுப்பாளையத்தில் இருந்து வருகிற 25, 27, 29, 31 மற்றும் ஜனவரி 2, 4, 15, 17, 23, 25 ஆகிய தேதிகளில் காலை 9.10 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் மதியம் 2.25 மணிக்கு ஊட்டி செல்லும்.

மறுமார்க்கத்தில் 26, 28, 30 மற்றும் ஜனவரி 1, 3, 5, 16, 18, 24, 26 ஆகிய தேதிகளில் ஊட்டியில் இருந்து காலை 11.25 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் மாலை 4.20 மணிக்கு மேட்டுப்பாளையம் செல்லும்.

இதேபோல மேற்கண்ட நாட்களில் ஊட்டி-குன்னூர் இடையே சிறப்பு மலை ரெயில் இயக்கப்பட உள்ளது. அதன்படி ஊட்டியில் இருந்து மதியம் 2.50, மாலை 3.55 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் குன்னூர் செல்லும். மறுமார்க்கத்தில் குன்னூரில் இருந்து காலை 9.20 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் 10.45 மணிக்கு ஊட்டி செல்லும்.

மேலும் வருகிற 25, 26, 27, 28, 29, 30, 31 மற்றும் ஜனவரி 1, 2, 3, 4, 16, 17, 18, 24, 25, 26-ந்தேதி வரை குன்னூர்-ஊட்டி இடையே சிறப்பு மலை ரெயில் இயக்கப்பட உள்ளது.

அதன்படி குன்னூரில் இருந்து காலை 8.20 மணிக்கு புறப்படும் ரெயில் 9.40 மணிக்கு ஊட்டி செல்லும். அதேபோல ஊட்டியில் இருந்து மாலை 4.45 மணிக்கு புறப்பட்டு 5.55 மணிக்கு குன்னூர் சென்றடையும்.

ஊட்டி-கேத்தி-ஊட்டி இடையே 3 ரவுண்ட் ஜாய் ரைடு சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது. அவற்றில் முதல் சுற்று ஊட்டியில் இருந்து காலை 9.45 மணிக்கு புறப்பட்டு 10.10 மணிக்கு கேத்தி செல்லும். பின்னர் அங்கிருந்து 10.30 மணிக்கு புறப்பட்டு 11 மணிக்கு ஊட்டி வந்தடையும்.

இரண்டாவது சுற்று 11.30 மணிக்கு ஊட்டியில் இருந்து புறப்பட்டு 12.10 மணிக்கு கேத்தி செல்லும். அங்கிருந்து 12.40 மணிக்கு புறப்பட்டு மதியம் 1.10 மணிக்கு ஊட்டி வந்தடையும்.


மூன்றாம் சுற்று மாலை 3 மணிக்கு ஊட்டியில் இருந்து புறப்பட்டு 3.30 மணிக்கு கேத்தி சென்றடையும். பின்னர் 4 மணிக்கு புறப்பட்டு மாலை 4.30 மணிக்கு ஊட்டி வந்தடையும். இந்த சிறப்பு மலை ரெயில்களில் சுற்றுலா பயணிகள் முன்பதிவு செய்து பயணிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# கவிதை அரங்கம்!





தோல்வி உன்னை
துரத்தினால்
நீ வெற்றியை
நோக்கி ஓடு

உன் மதிப்பை
முடிவு செய்ய
வேண்டியது நீ தான்
உன்னை சுற்றி
இருப்பவர்கள் அல்ல


உன்னையே நீ நம்பு
ஓர் நாள் உயர்வு நிச்சயம்

பணிந்து போ
உன் தகுதியை உயர்த்தும்
துணிந்து போ
உன் திறமையை
உயர்த்தும்

தைரியம் பயத்தை விட
ஒரு படி மேலே உள்ளது

தோல்வியிடம்
வழி கேட்டு தான்
வந்து சேர முடியும்
வெற்றியின் வாசற்படிக்கு

## கனவு இல்லம் கனவாகலாம்...



ஒருவன் எப்பொழுது தனக்கு ஏற்படும் தடைகளையும் துன்பங்களையும் கருத்திற்க் கொள்ளாமல் வாழ்கிறானோ அவனே வாழ்வில் நிறையத் தோல்விகளைச் சந்தித்தவனாவான். வெற்றி பெற்றவன் துன்பத்தையும் தடங்களையுமே வாழ்வில் கொண்டவனாக இருப்பான். பல தடவை தோற்றுவிடு நீ உன் வாழ்வை வென்று விடுவாய்.

காற்றின்றி படகுகள் அசைவதில்லை

தாயே நீ இன்றி எனக்கு முன்னேற்றம் ஏது?

கடல் அலையே அசையாதிருக்கும் படகை மூழ்கடிக்காதே.

உனக்கு ஒரு பொருள் பிடித்திருந்தால் உன் பெற்றோரைத் தானே முதல் கேட்க்கிறாய்.. என் நீ வளர்ந்த பிறகு அவர்களிடம் கேட்பதை விட்டு உன்வழி போகிறாய். நீயும் ஒரு நாள் பெற்றோர் ஆவாய் என்பதை மறந்து விட்டாயோ?...

# கடமையைச் செய்....!

இரவு நடுநிசி நேரத்தில் பேருந்து நிலையத்தை அடைந்ததும் பேருந்தில் உறங்கிக் கொண்டிருந்தவர்களை தட்டி எழுப்பி ஊர் வந்த இறங்க மாட்டிங்களா...என நடத்துனர் சத்தம் போட ,

மூடிய விழிகளை திறக்க விடாமல் இமைகள் தழுவிக் கொண்டு இருந்ததை பிடிவாதமாய் திறந்து விழிகள் பார்க்க எரிச்சல் உணர்வை ஏற்படுத்தியது
தள்ளாடியபடி எழுந்து கணமாக இருந்த லக்கேஜ் பேக்கை தூக்கி தோளில் வைத்து பேருந்தின் படியில் இறங்கினான் சாமிதுரை

ஆட்கள் இறங்கியதும் பேருந்து புறப்பட்டது
பேருந்து நிலையத்தில் ஆட்கள் அதிகமாக இல்லை ஒரு சிலர் மட்டும் கடை வாசல் படியில் அமர்ந்திருந்தனர் உயரமாய் இருந்த மின் விளக்குகள் பனி படர்ந்த நிலையில் சோபித்த படி மங்கலாக வெளிச்சம் படர்ந்திட இருளை விரட்டி பளிச் சென பிரகாசமாய் பாய்ந்திருந்தது

இதனைப் பார்த்தவன் தூக்க கலக்கம் தள்ளாட வைத்தது உடனை சாமிதுரை பையில் இருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்து முகத்தை கழுவியவன் கண்களில் தண்ணீரை தெளித்து எரிச்சலை போக்கி கைத்துண்டை எடுத்து துடைத்தவன் பையில் வைத்து விட்டு அழைப்பிதழை எடுத்து முகவரியைப் பார்த்தவன் பேருந்து எதிரே இருந்த கடையின் பெயர் பலகையைப் பார்த்தான் வீதியின் பெயரைப் பார்த்துக் கொண்டு இருக்கும் போது

இரு சக்கர வாகனத்தில் இரவு காவல் காக்கும் காவலர்கள் இருவர் வருவதைப் பார்த்தவன் காவலரிடம் அழைப்பிதழைக் காட்டி கேட்கலாமா என எண்ணிக் கொண்டு இருக்கும் போது காவலர் ஒருவர் அருகில் வந்தார்

"வாய்யா...அய்யா...
கூப்பிடுகிறார் "என அழைத்துக் கொண்டே "எந்த ஊருய்யா.. கடையையே பாத்துக்கிட்டே இருக்கே "என கேட்டுக் கொண்டே
சார்...எதுவும் பதில் சொல்ல மாட்டிங்கிறான் சார்" என்று சொல்ல
"யோவ் அவன் வைத்திருக்கும் பையைச் செக் பண்ணுய்யா..."
"பையில என்னய்யா வச்சுருக்கே கொண்டய்யா.. பாக்கலாம் "என்று தோளில் இருந்த பையை வாங்கி கையால் அமுக்கி பார்த்து விட்டு அவர் அருகில் சென்று
"சார் கட்டுக்கட்டா ஏதோ இருக்கு சார் "

"யோவ்...பணக்கட்டா இருந்தாலும் இருக்கும்ய்யா அத எதுவும் செய்யாதே அப்படியே வீட்ல கொடுத்துட்டு வா நா இந்தாள விசாரிக்கிறே என்ன "

"சார் திறந்து என்ன இருக்குன்னு செக் பண்ணுவோம் சார் "
"யோவ் விவரம் தெரியாம பேசாதய்யா... கடைகள் எல்லாம் திறக்க வந்திருவாங்க பேருந்தும் அதிகமா வரத் தொடங்கிடும் அப்பறம் கூட்டம் சேர்ந்திரும் போய்யா நா சொன்னதைச் செய்யா.."என்று சொல்லவும்
"சரிசார் பையை எடுத்து இரு சக்கர வாகனத்தில் வைத்துக்கொண்டு வந்தவழியேச் சென்றார் காவலர் "
"சார் சார் அது வந்து பையில... "
"யோவ் எதுவும் பேசாதே எங்கிருந்து வர்றே,உன் பேரென்ன இங்கே யாரப் பார்க்க வந்தே
இரு சக்கர வாகனத்தில் வரும் போது உன்னே பாத்துக்கிட்டே வந்தேன் கடையப் பார்க்கிறே சுற்றி பார்க்கிறே "என வந்தவரைப் பேச விடாமல் கேட்டார் இரவுக் காவலர் ரத்தினம்
" முகவரியைப் பார்த்தேன் சார் "

"என்ன முகவரிய பார்த்தே உன்னே மாதிரி எத்தனை பேர பார்த்திருக்கே வாய்யா ஸ்டேஷனுக்கு "என்று சொல்லிக் கொண்டே
அலைபேசி எடுத்தார் அப்போது போன காவலர் திரும்பி வந்தவர்
"என்ன சார் எதாவது தகவல் கிடைச்சதா "
"அவ எதுவும் பேச மாட்டிங்கிறானய்யா"
"சார் ஒரு வேளை அவ ஊமையா இருப்பானோ "
"இல்லையா பேசுரா"
"என்ன சார் பேசுனா "
"யோவ் காலையிலேயே கடுப்பேத்தாதே முதல்ல ஸ்டேஷனுக்கு வண்டிய விடுய்யா "
இந்தாளே...
"இந்தாளையுந்தான்"
சாமியை ஏத்திக்கிட்டு காவலர்கள் காவல் நிலையத்திற்கு வந்தார்கள்
"யோவ்..இந்தாளே.. உள்ளே உட்கார வை நா வீட்டுக்கு போய் செக் பண்ணிட்டு பைய எடுத்துட்டு வர்றேன் யாரும் கேட்டா சந்தேகக் கேசுல புடுச்சுட்டு வந்தோம்னு சொல்லு சரியா" எனச் சொல்லி விட்டு ரத்தினம் இருசக்கர வாகனத்தில் சென்றார்
சாமிதுரை காவல் அலுவலகத்தைப் பார்த்தார் இருந்த ஒரு காவலரும் உள்ளே போனார் பெஞ்சில் இருந்தவாறு யோசித்தார் "அவங்களா பேசினாங்களேத் தவிர எதுவுமே சொல்ல விடமாட்டிங்கிறாங்களே "என்றெண்ணி யவர் நிகழ்விற்கு வரச் சொன்னவர்களுக்கு தொடர்பு கொண்டார் சிறிது நேரங்களித்து ஹலோ....என குரல் அழைக்க
"அய்யா நா சாமிதுரை பேசுறேன் வந்துட்டிங்களா.."என கேட்க நடந்த விவரத்தை சொல்லி முடித்தார் "
அப்பிடியா அங்கேயே இருங்க நா வர்றேன்னு" சொல்லி வைத்தார்
வேகமாக வீட்டிற்கு வந்த ரத்தினம்
"பை. கொண்டு வந்து கொடுத்தாங்களா" "ஆமாங்க அது வந்துங்க..."
"நா வந்து பேசிக்கிறலாம்னு" சொல்லிக்கொண்டே பாத்ரூமிற்குள் ஓடினார்
கொஞ்ச நேரங்கழிச்சு அவர் உள்ளறையில் நூழைந்து பையை எடுத்து கட்டிலில் வைத்தார் அப்போது வாசலில் அழைக்கும் குரல் கேட்டு அறையை விட்டு வெளியே வந்தார் அவர் மனைவி வாசல் கதவை திறக்கவும் காவல் ஆய்வாளரைப் பார்த்ததும் "சார் இப்பத்தா வீட்டிற்கு வந்தேன்னு" உளறினார்
"எங்கய்யா.... கொண்டு வந்த பையா..."
"அது வந்து சார் "
"இதா நீ நைட்டூட்டி பார்க்கிற லட்சணமா.."என்றார் "அய்யா.... சாமிதுரை இங்கே வாங்கன்னு" அழைக்க
சாமிதுரையுடன் மற்றொருவரும் உடன் இவர்களைப் பார்த்ததும்

"பையில் ஏதோ விலை மதிக்க முடியாத வெயிட்டான தா ஏதோ இருக்கிறது அய்யோ...கைக்கு கிடைச்சது வாயிக்கு கிடைக்காது போலிருக்கே "என மனதிற்குள் புலம்பிக் கொண்டு இருக்க ரத்தினத்தின் மனைவி அறையில் இருந்து பையை தூக்கிட்டு வந்து வைக்கவும் இந்த பையில என்னய்யா இருக்கு"
"தெரியல சார்..."
"அதத்திறய்யா...."
பையில் இருந்த ஜிப்பை இழுக்கவும் உள்ளே பார்த்தார்

துண்டு,சட்டை வேஷ்டி துணிகள் அதற்கு கீழ் பார்க்க அழகா அடிக்கி வைக்கப் பட்டிருந்த புத்தகங்கள் ஆ .... புத்தகமா... அய்யோ காலையிலே கான்ஸ்டபிள் பண்ணிய வேலே மனசுல ஆசை வர்ற மாதிரியே பேசி என்னை இப்படி அசிங்கப்பட வைத்து விட்டானே என ரத்தினம் பொறுமிக் கொண்டே புத்தகங்களை எடுத்துக் காண்பித்தார் என்னய்யா இது ? இன்னைக்கு வெளியீட்டு விழாவிற்கு கொண்டு வந்ததை நீ எதுக்குய்யா .... வீட்டிற்கு கொண்டு வந்தே ? அதுவும் என்ன ஏதுன்னு விசாரிக்காம அவரை எதுக்குய்யா ஸ்டேஷனில் இருக்க வச்சுட்டு வந்தேன்னு கேட்டுக் கொண்டே புத்தகத்தை வாங்கிப் பார்த்தார் "கடமையைச் செய்" என்று அட்டைப் படத்தில் வடிவமைக்கப்பட்டு கீழே சாமிதுரைன்னு பெயர் இருந்ததைப் பார்த்தவர் "கடமையைச் செய்னு அம்சமான புத்தகத்தை பதுக்கப் பார்த்திருக்கே அய்யா சாமிதுரை சிறப்பான முறை நூல் வெளியிடுங்கள் நானும் நிகழ்விற்கு வருகிறேன் இப்படி நடந்ததற்கு அவர் சார்பாக வருத்தத்தை தெரிவிச்சுக்கிறேன் ரத்தினம் இருநூறு ரூபா எடுத்துட்டுட்டு வாய்யா "என்று சொல்லவும் வேகமா உள்ளே போய் சட்டையில் இருந்த ரூபாயை பார்க்காமல் எடுத்து வந்து அவரிடம் கொடுக்க வாங்கிப் பார்த்தவர் "ரத்தினம் உனக்கு தாராள மனசுயா இருநூறு ரூபா கேட்டா ஐநூறு ரூபா கொடுக்கிறியே உன்ன பாராட்டுகிறேன் , அய்யா சாமிதுரை நா ஒரு புத்தகம் அவர் ஒரு புத்தகம் இந்தாங்க ஐநூறு ரூபா வச்சுக்கோங்க நடந்தத மறந்திடுங்க உங்கள் கடமையைச் செய் நூல் அமோகமாக விற்பனை ஆகட்டும் வாழ்த்துக்கள் "எனச் சொல்லி அனுப்பி விட்டு
"ரத்தினம் பணக்கட்டு இருக்குன்னு தானே பையை தூக்கிட்டு வந்தே ஏய்யா உனக்கு இந்த பேராசை "ன்னு சொல்லவும் அவமானத்தில் தலை குனிந்து நின்றார் ரத்தினம்

**நல.ஞானபண்டிதன்**
திருப்புவனம் புதூர்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*கணவர்: இது மாதிரி என்கிட்டே தொடர்ந்து சண்டை போட்டுக்கிட்டே இருந்தா ஒரு நாள் மிருகமா மாறிடுவேன் ஜாக்கிரதை !*



*மனைவி: அட நீங்க வேற எலியைப் பார்த்தெல்லாம் நான் பயப்பட மாட்டேன்!*

# தினம் ஒரு சமையல்



## மீன்_பொரியல்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| மீன் | - 2 |
| வெங்காயம் (நறுக்கியது) | - 1 |
| தக்காளி | - 1 (நறுக்கியது) |
| மிளகாய் தூள் | - 1 டீஸ்பூன் |
| கொத்தமல்லி தூள் | - 1 தேக்கரண்டி |
| இஞ்சி மற்றும் பூண்டு விழுது | - 1 டீஸ்பூன் |
| தக்காளி மிளகாய் சாஸ் | - 2 டீஸ்பூன் |
| சோயா சாஸ் | - 1 தேக்கரண்டி |
| சுவைக்க உப்பு | |
| எண்ணெய் | - 1 தேக்கரண்டி |

செய்முறை:



* ஒரு கடாயில் எண்ணெயை வைத்து சூடாகும்போது வெங்காயம் சேர்த்து வெங்காயம் இளஞ்சிவப்பு நிறமாக வரும் வரை வறுக்கவும்.
* இஞ்சி மற்றும் பூண்டு சேர்த்து வறுக்கவும் .
* தக்காளி சேர்த்து நன்கு வறுக்கவும். மிளகாய் மற்றும் கொத்தமல்லி தூள், உப்பு சேர்த்து சிறிது நேரம் வறுக்கவும்.
* இப்போது மேலே உள்ள அனைத்து சாஸையும் சேர்த்து 2 நிமிடம் வறுக்கவும், பின்னர் அதில் மீன் சேர்த்து நன்கு கலக்கவும்.
* சூடாக பரிமாறவும்.

## சூரியகாந்தி நன்மைகள்



1. இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது: மோனோசாச்சுரேட்டட் மற்றும் பாலி அன்சாச்சுரேட்டட் கொழுப்புகளின் அதிக உள்ளடக்கம் காரணமாக இவை இதயத்திற்கு ஆரோக்கியமானவை. இந்த ஆரோக்கியமான கொழுப்புகள் கெட்ட கொலஸ்ட்ரால் (எல்டிஎல்) அளவைக் குறைக்கிறது மற்றும் இதய நோய் அபாயத்தை குறைக்கிறது. மேலும், சூரியகாந்தி விதைகளில் உள்ள வைட்டமின் ஈ, அழற்சி எதிர்ப்பு முகவராக செயல்படுவதோடு, ஆக்ஸிஜனேற்ற அழுத்தத்திலிருந்து இதயத்தைப் பாதுகாக்கிறது.

2. உடல் பருமனை குறைக்கிறது: புரதம் மற்றும் நார்ச்சத்து இதில் நிறைந்து இருப்பதால் முழுமையான உணர்வை தருகிறது. மற்ற தின்பண்டங்களை உண்ணுவதில் இருந்து காக்கிறது. சூரியகாந்தி விதைகளில் உள்ள ஆரோக்கியமான கொழுப்புகள், கரையக்கூடிய வைட்டமின்களின் உறிஞ்சுதலை அதிகரிக்கின்றன. அவை எடை மேலாண்மைக்கு முக்கியமானவை.

3. பளபளப்பான சருமத்தை தருகிறது: சூரியகாந்தி விதைகளில் உள்ள வைட்டமின் ஈ, முன்கூட்டியே முதுமையை ஏற்படுத்தும் ஃப்ரீரேடிக்கல்களை நீக்குவதன் மூலம் சரும ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. இது கொலாஜன் உற்பத்திக்கும் உதவுகிறது. இது சருமத்தை உறுதியாகவும் மிருதுவாகவும் வைத்திருக்கும். சூரியகாந்தி விதையில் உள்ள ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் வீக்கத்தைக் குறைத்து புற ஊதா கதிர்வீச்சினால் ஏற்படும் பாதிப்பிலிருந்து சருமத்தைப் பாதுகாத்து பளபளப்பாகவும் வைக்கிறது.

4. மூளை செயல்பாட்டை அதிகரிக்கிறது: சூரியகாந்தி விதைகளில் உள்ள ஏராளமான ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் மற்றும் வைட்டமின் ஈ மூளை வளர்ச்சி மற்றும் செயல்பாட்டில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மூளை செல்கள் மற்றும் நியூரான்களை ஆக்ஸிஜனேற்ற சேதத்திலிருந்து பாதுகாக்கிறது. அறிவாற்றல் வீழ்ச்சியைத் தடுப்பதோடு, நினைவகம் மற்றும் செறிவை மேம்படுத்துகிறது.


5. எலும்புகளை வலுவாக்கும்: சூரியகாந்தி விதைகளில் மெக்னீசியம், கால்சியம் மற்றும் தாமிரம் போன்ற தாதுக்கள் உள்ளன. அவை எலும்புகளின் ஆரோக்கியத்திற்கு அவசியமானவை. இந்த தாதுக்கள் எலும்பின் வலிமை மற்றும் அடர்த்தியை மேம்படுத்தி, ஆஸ்டியோபோரோசிஸ் மற்றும் எலும்பு முறிவு அபாயத்தைக் குறைக்கிறது. இதில் உள்ள பைட்டோஸ்டெரால்கள் வீக்கத்தைக் குறைக்கவும், எலும்பு ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன.

6. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது: இதில் உள்ள ஆன்டி ஆக்ஸிடன்ட்கள், வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள், வைட்டமின் ஈ மற்றும் செலினியம் ஆகியவை நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தவும், தொற்று நோய்களிலிருந்து உடலைப் பாதுகாக்கவும் உதவுகின்றன. இதில் உள்ள துத்தநாகச் சத்து நோய் எதிர்ப்புச் செயல்பாட்டிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

# ஜி.வி.பிரகாஷ் நடிப்பில் உருவாகும் அடுத்த படம் என்ன? வெளிவந்த முக்கிய அறிவிப்பு!

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் அவர்களின் அக்கா மகன் என்ற அடையாளத்தோடு தமிழ் சினிமாவில் களமிறங்கியவர் ஜி.வி.பிரகாஷ் குமார். வெயில் படத்தின் மூலம் இசையமைப்பாளராக களமிறங்கியவருக்கு முதல் படமே செம ஹிட் கொடுத்தது.


அதற்கு முன் ஜெண்டில்மேன் என்ற படத்தில் பாடகராக அறிமுகமானவர் இப்போது ஹீரோவாக கலக்கி வருகிறார். தற்போது, பிளாக் மெயில்




என்ற படத்தில் நடித்துள்ளார்.

இந்நிலையில், ஜி.வி.பிரகாஷ் நடிக்கும் அடுத்த படத்தின் அறிவிப்பு இன்று காலை 11.11 மணிக்கு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படத்தை பியாண்ட் பிக்சர்ஸ் தயாரிக்கிறது. இப்படம் தயாரிக்கும் முதல் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.



சினிமா

அழகான மாடர்ன் லுக்கில் இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்ஸ் இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது. இதோ,

# ஜனநாயகன் இசை வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ளும் முன்னணி நடிகர்? யார் தெரியுமா

வருகிற டிசம்பர் 27ஆம் தேதி மலேசியாவில் ஜனநாயகன் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா பிரம்மாண்டமாக நடக்கவிருக்கிறது.

தளபதி கச்சேரி, இசை திருவிழாவுடன் ஜனநாயகன் இசை வெளியீடு நடப்பதால், இந்த நிகழ்ச்சியை நேரில் காண விஜய் ரசிகர்கள் ஆவலுடன் உள்ளனர். மலேசியாவில் உள்ள புகித் ஜலீல் அரங்கத்தில் நடக்கும் இந்த விழாவில் சுமார் 85,500 பேர் அமர்ந்து பார்க்க முடியும்.

மேலும் இந்த விழாவில் விஜய்யின் திரை வாழ்க்கையில் பல சூப்பர்ஹிட் பாடல்களை பாடி அசத்திய பின்னணி பாடகர்கள் கலந்துகொள்கிறார்கள்.

இந்த நிலையில், ஜனநாயகன் இசை வெளியீட்டு விழாவில் தமிழ் சினிமாவின் முன்னணி ஹீரோவான தனுஷ் கலந்துகொள்ள போவதாக



தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், இது எந்த அளவிற்கு உண்மை என தெரியவில்லை. மேலும், இயக்குநர்கள் லோகேஷ் கனகராஜ், நெல்சன், அட்லீ ஆகியோரும் இதில் கலந்துக்கொள்கிறார்களாம்.

நடந்தால் கண்டிப்பாக ரசிகர்களுக்கு செம ட்ரீட் ஆக அமையும் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை. ஏற்கனவே மெர்சல் படத்தின் இசை வெளியீட்டு விழாவில் தனுஷ் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com**